முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS. No.421/2023

Witness PW1

பெயர் / பச்சையப்பன் (எ) விநாயகம்

**த.பெ - கணேசன்**

**இன்று** (10.09.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தம்பி ராமலிங்கம்எந்த வருடம் இறந்து போனார் என்றால் 1993 இல் இருந்து போனார் எனது தம்பி அவரது மனைவி மக்களை விட்டு விட்டு தான் இறந்து போனார் என்றால் சரிதான் நான் தாக்கல் செய்துள்ள வாசா,ஆ 5 பாக அட்டவணையில் எனது தம்பி ராமலிங்கம் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான் இந்த பாக அட்டவணையில் தாவா சொத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் பாக அட்டவணை பதிவு செய்யப்படாத காரணத்தினால் அதற்கு முத்திரை தீர்வை செலுத்த வேண்டும் என்றால் அப்போது நாங்கள் அது பற்றி நினைக்கவில்லை இந்த பாகம் அட்டவணையில் முனுசாமியின் அனைத்து வாரிசுகளும் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான் சுப்ராயன் முதலியாருக்கு மூன்று மகன்கள் என்றால் சரிதான் அவர்கள் பெயர் முனுசாமி முதலியார் பழமலை முதலியார் வேலாயுதம் முதலியார் என்றால் சரிதான் தாவாவில் கண்ட மொத்த விஸ்தீரனமான 83 செண்டில் மேற்படி 3 பேருக்கும் தலா 27 முக்கால் சென்ட் என்றால் சரிதான் வேலாயுதம் முதலியார் குமாரர் ஆறுமுகம் முதலியார் என்பவரிடமிருந்து முனுசாமி முதலியார் மகன் செம்மநேரி என்பவர் 27 முக்கால் சென்ட் வாங்கினார் என்றால் சரிதான், வா,சா,ஆ 2 ஆனது செம்மநேரி கிரையம் வாங்கிய பத்திரம் என்றால் சரிதான் வா,சா,ஆ 2 ல் முனுசாமி முதலியார் செம்மநேரி பேரில் பொதுக்குடும்ப நலனுக்காக வாங்கப்பட்டது என்று எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான், வா/சா,ஆ 2 ல் கண்ட சொத்து செம்மநேரி என்பவரின் தனிப்பட்ட சொத்து

பொதுக்குடும்ப சொத்து அல்ல என்றால் சரியல்ல, வா,சா,ஆ 4 ஆனது வா,சா,ஆ 2ல் கிரையம் பெற்ற சொத்தை ஒரு அங்கமுத்து என்பவ்ருக்கு விற்றதற்கான கிரையப் பத்திரம் என்றால் சரிதான், வா,சா,ஆ 4ல் பொதுக்குடும்ப நலனுக்காகத்தான் சொத்து விற்கப்பட்டது என்று என்ற வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான், வா,சா,ஆ 3 பட்டாவானது முனுசாமியின் மகன்கள் செம்மநேரிஇ குப்பன்இ பழனிச்சாமிஇ அருணாச்சலம் ஆகிய 4 பேர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், எனது வழக்குரையில் செம்மநேரி முதலியாருக்கு 27 செண்ட்இ பழனிச்சாமி முதலியாருக்கு 27 செண்ட்இ குப்பன் முதலியார் மற்றும் அருணாச்சல முதலியார் ஆகியோர்களுக்கு தலா 13 செண்ட் என்று வாசகம் உள்ளது என்றால் சரிதான், இவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதற்காக ஆவணங்கள் எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, மேற்படி 4 பேர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக இருந்தது தனிப்பட்டாவாக மாறிவிட்டது என்பதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வா,சா,ஆ 5 பாகப்பிரிவினை ஆவணத்தில் எனக்கு பி பட்டியல் சொத்து ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பி பட்டியலில் எனக்கு 16 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்று கண்டுள்ள்து என்றால் சரிதான், வா,சா,ஆ 5ல் கண்ட சாட்சிகளில் யர்ர் உயிருடன் உள்ளார்கள் என்றால் தில்லை முதலியார் மற்றும் மூர்த்தி முதலியர்ர் ஆகியோர்கள் உள்ளார்கள், அதில் யாரை சாட்சியாக விசாரிக்க போகிறேன் என்றால் தில்லை முதலியாரை சாட்சியாக விசாரிக்கப் போகிறேன், எனது வழக்குரையில் பழமலை முதலியாருடைய சொத்து என்னவாயிற்று என்பது குறித்து எந்த விவரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், முனுசாமி முதலியாரின் 27 சென்ட் மற்றும் செம்மநேரி பேரில் வாங்கிய 27 செண்டு ஆக கூடிய 55 செண்டை பொதுக்குடும்பத்தால் அனுபவித்து வரப்பட்டது என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாவா சொத்தின் பழைய பட்டா 354 புதிய பட்டா எண்,475 என்றால் சரிதான், மேற்படி இரண்டு பட்டாக்களும் கூட்டுப் பட்டாக்க்ள் தான் என்றால் சரிதான், தாவா சொத்து 83 செண்டும்இ பொதுக்குடும்ப சொத்தாக இருந்து பொதுவாக

அனுபவிக்கப்பட்டதால் தான் கூட்டுப் பட்டாவாக உள்ளது தனிப்பட்டாவாக ஏற்படவில்லை என்றால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ள வாய்தா ரசீதுகள் தொடர்ச்சியாக இல்லை என்றால் எனக்கு கிடைக்கப்பெற்ற வாய்தா ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன், மற்ற வாய்தா ரசீதுகள் முனுசாமியின் மற்ற வாரிசுகளிடம் உள்ளதால் தான் நான் தொடர்ச்சியாக வாய்தா ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, இன்றைய தேதியில் பட்டா 475 யார் பெயரில் உள்ளது என்றால் செம்மநேரிஇ அருணாச்சலம்இ குப்பன்இ முத்துக் கவுண்டர் ஆகியோர்கள் பெயரில் உள்ளது, எனது பெயரையும்இ லட்சுமி பெயரையும் பட்டா 475 லிருந்து நீக்கிவிட்டார்கள் என்றால் சரிதான், நான் பட்டாவில் என் பெயரை சேர்க்கச் சொல்லி விக்ரவாண்டி வட்டாட்சியருக்கு நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த மனு அனுமதிக்கப்பட்டதால் பிரதிவாதி அதனை எதிர்த்து விழுப்புரம் கோட்டாட்சியர் முன்பாக மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான், கோட்டாட்சியர் உத்தரவின் பேரில் தான் எனது பெயரையும் லட்சுமி பெயரையம் பட்டா 475 லிருந்து நீக்கினார்கள் என்றால் சரிதான், தற்போது என்னிடம் காட்டப்படுவது தான் விழுப்புரம் கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவு என்றால் சரிதான் அது பி,த,சா,ஆ 1, எனது பெரியப்பா கிருஷ்ணசாமிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பெண்கள்இ 2 ஆண்கள், நடேசனுக்கு எத்தனை வாரிசு என்றால் வாரிசு இல்லை, பழனிக்கு எத்தனை வாரிசு என்றால் 2 ஆண் வாரிசுகள், செம்மநேரிக்கு எத்தனை வாரிசு என்றால் 2 ஆண்இ 2 பெண்கள், எனது தந்தையார் கணேசனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான் மற்றும் எனது தம்பி ராமலிங்கம், தாவா சொத்து 83 செண்டில் முனுசாமிக்கு பாத்தியமான 27 செ்ண்டு அவரது வாரிசுகள் 5 பேருக்கும்இ மற்றும் மேற்படி 5 பேரின் வாரிசுகளுக்கும் பாத்தியமானது என்றால் சரியல்ல, எனது பெரியப்பா செம்மநேரி எந்த வருடம் சொத்தை விற்றார் என்றால் 7,7,1960 ல் விற்றார், அவரவர்கள் பாகம் பிரித்து அதனை விற்றுவிட்டார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, வா,சா,ஆ 10 ஆவணத்தில் தாவா சொதத்து 153.5 பி 4 க்கு நான்குபுறமும் எனக்கு சொத்து உள்ளதற்கான எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான், வா,சா,ஆ 11 சேகர் எழுதிக் கொடுத்த

அடமானப் பத்திரத்திலும் நான்கு புறமும் எனக்கு சொத்து உள்ளதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான், வா,சா,ஆ 12 ல் கண்டுள்ள 2 அயிட்டச் சொத்துக்களான 153.6 சி1இ 153.6 சி3 என்றால் சரிதான், வா,சா,ஆ 12 ல் வழக்கு சர்வே எண் ஆன 153.5 பி4 க்கு கிழக்கு என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான்,

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது, )

Taken down before me in Open Court and
read over/interpreted to the witness and
acknowledged by him/her to be correct.
Sd/-A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram